## ஒதுக்கீட்டுத் தலைப்பு 276 - பதுளை மாவட்டச் செயலகம்
## கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு

### 1.1 மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) அரசாங்க கருமங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்

(ஆ) வருமானத்தினைச் சேகரித்தல்

(இ) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கம நெகும நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

(ஈ) தேர்தல்களை ஒருங்கிணைத்தல்

(உ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் கருமங்களை பிரதேச மட்டத்தில் அமுலாக்கும் முகவராக செயற்படுதல்.

(ஊ) மாகாண சபைக் கருமங்களிற்கு ஒத்துழைத்தல்

### 1.2 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) மஹியங்கனை

(ஆ) ரிதிமாலியத்த

(இ) கன்தகெட்டிய

(ஈ) மீகஹகிவுல

(உ) சொரணாதொட

(ஊ) லுணுகல

(எ) பதுளை

(ஏ) பசறை

(ஐ) ஹாலிஎல

(ஒ) ஊவ பரணகம

(ஓ) வெலிமட

(ஔ) எல்ல

(க) பண்டாரவல

(கா) ஹபுத்தலை

(கி) ஹல்துமுல்ல

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

பதுளை மாவட்டச் செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 13 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பதுளை மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்ளைப் பேணியிருக்காமை

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிவரப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|---|
| (i) | உத்தியோகபூர்வ இல்லங்களின் பொருள் இருப்பு பதிவேடு | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 8.2 ஆம் பிரிவு |
| (ii) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (iii) | ஆளணி வேதனங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 453 |
| (iv) | பெறுவனவுகளை வகைப்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 538 |
| (v) | பொது வைப்புக்களைச் சமப்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 565(3) |
| (vi) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891 |

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த ஏற்பாடுகளும் செலவினமும்**

மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 540,175,217 ஆனதுடன் ஆண்டின் இறுதியளவில் அதில் ரூபா 519,666,565 பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்புக்கள் ரூபா 20,508,652 ஆக காணப்பட்டதுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 3.8 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவின விபரம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 398,075,000 | 477,525,217 | 10,259,600 | 2.15 |
| மூலதனம் | 62,650,000 | 62,650,000 | 10,249,052 | 16.36 |
| மொத்தம் | 460,725,000 | 540,175,217 | 20,508,652 | |

**(ii) பாதீட்டு முரண்**

- இரண்டு செலவு விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 875,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.
- 05 செலவு விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அச்செலவு விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 24 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தன.
- 2011 திசெம்பர் 31 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தேச சேமிப்பினை உள்ளடக்கும் வகையில் திருத்திய மதிப்பீடு தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக 19 அமைச்சுக்கள் மற்றும் 16 திணைக்கங்களிடமிருந்து முறையே ரூபா 3,140,558,799 மற்றும் ரூபா 1,286,846,067 தொகைகளாக ரூபா 4,427,404,866 மொத்த தொகையான ஏற்பாடுகள் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் முறையே ரூபா 3,022,785,962 மற்றும் ரூபா 1,260,036,164 ஆக ரூபா 4,282,823,126 மொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 144,582,740 அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாட்டில் 3.3 சதவீத சேமிப்பு வெளிப்படுத்தப்பட்டது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

  ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை – கம நெகும நிகழ்ச்சித்திட்டம்

  - சொரனாதோட்டை பிரதேச செயலகத்தினால் ரூபா 1,114,008 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கந்தேஅராவ கிரியகொல்ல வீதிக்கு கொங்கிரீட் இடும்போது கொங்கிரீட் இடுவதற்கு முன்னர் பொலிதீன் விரிக்கப்பட்டிருக்காததுடன் அதற்காக ரூபா 7,686 தொகை ஒப்பந்தக்காரச் சங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

  - பதுளை பிரதேச செயலகத்தினால் ரூபா 18,106,086 பெறுமதியான 19 வேலைகளையும் ஹப்புத்தலை பிரதேச செயலகத்தினால் ரூபா 30,082,900 பெறுமதியான 22 வேலைகளையும் நிர்வகிப்பதற்கு வெளிக்கள சம்பவக் குறிப்பு புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் வேலைகளை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் வேலைகளைப் பரீட்சித்தமைக்கு அல்லது தேவையான ஆலோசனைகளை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கியமைக்குச் சான்றுகள் காணப்படவில்லை.

  - ஹல்தமுல்ல பிரதேச செயலகத்தினால் இரண்டு வீதிகளுக்கு கப்பிக்கல் பரப்பும் போது 13.11 மீற்றர் மேலதிகமாக அளவீடு செய்ததன் காரணமாக கப்பிக்கல் பரவுதல் ஆற்றுமணல் பரவுதல் ஆகிய

விடயங்களுக்காக ரூபா 68,054 தொகை உரிய ஒப்பந்தச் சங்கங்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட வீதி விலைகளைப் பயன்படுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட்டதுடன் விலைகளில் பொதுச் செயற்பாடுகளுக்காக 10 சதவீதம் ஒதுக்கப்பட்டு மாதிரிகளைப் பரிசோதிக்கும் செலவுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆனால் ஹல்துமுல்ல பிரதேச செயலகத்தினால் கப்பிக்கல் பரப்பும் செயற்திட்டத்தின் போது கப்பிக் கற்களைப் பரீட்சிப்பதற்காக இலாபமும் பொதுச் செயற்பாட்டுச் செலவுகளும் 20 சதவீதம் உள்ளடக்கிய விசேட விலைகள் தயாரிக்கப்பட்டு கப்பிக்கல் பரப்பும் 30 செயற்திட்டங்களுக்காக ரூபா 524,530 தொகை மீண்டும் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டு அத்தொகை உரிய ஒப்பந்தக்காரச் சங்கத்திற்குச் செலுத்தப்பட்டது.

- மதிப்பீட்டைத் தயாரித்தல்

-----------------------------------------

2011 செப்தெம்பர் 02 ஆந் திகதிய MED/RE ஆம் இலக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 2011 ஆம் ஆண்டின் கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய வழிகாட்டிகளின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் கமநெகும நிகழ்ச்சிட்டத்தை அமுல்படுத்தும் போது மொத்த மதிப்பீட்டின் அடிப்படையில் 20 சதவீதத்திற்கு மேற்படாத தொகை பயிற்றப்படாத வேலையாட்களை மதிப்பீடு செய்தல் மற்றும் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட வேலையாட்களை முறைப்படியாக மதிப்பீடு செய்யாமை என்பவற்றின் மூலம் பதுளை பிரதேச செயலகத்தினால் 15 அனுசரணைச் சங்கங்களுக்கு ரூபா 418,854 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக பதுளை மாவட்ட செயலகத்தின் 15 பிரிவுகளில் 567 செயற்திட்டங்களுக்காக மதிப்பீடு தயாரிக்கும் போது பொருடகள், வேலையாட்கள், ஏனைய செலவுகள் என்பற்றை வெவ்வேறாக எடுத்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக வீதி மற்றும் கட்டிட விலைகள் ஈடுபடுத்தப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் மூலம் இலாபமாக ரூபா 39,706,049 தொகை செயற்திட்டத்தை அமுல்படுத்திய ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டம்

  ---------------------------------------------------------------------------

  மஹியங்கனை பிரதேச செயலகத்தில் ரூபா 661,650 பெறுமதியான 437 பொருட்களும் சொரணதொட பிரதேச செயலகத்தில் ரூபா 29,450 பெறுமதியான 74 மண்வெட்டிகளும் ஊவ பரணகம பிரதேச செயலகத்தில் ரூபா 354,000 பெறுமதியான 183 உபகரணங்களும் நலன்பெறுனர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டன.

- திவிநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

  ------------------------------------------------------------------

  - 2012 ஆம் ஆண்டில் பதுளை பிரதேச செயலகத்தினால் ரூபா 1,019,875 பெறுமதியான மற்றும் ஹாலி எல பிரதேச செயலகத்தினால் ரூபா 2,494,400 பெறுமதியான நாற்றுக்களைப் பகிர்ந்தளிக்கும் போது 2012 யூலை 10 ஆந் திகதிய 2/2012 ஆம் இலக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் சுற்றுநிருபத்தின் 05.01.02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலிலை.

  - மேலே குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் நலன்பெறுனர்களை இனங்காண்பதற்காக வசதியளித்தல் உத்தியோகத்தர்களின் பங்களிப்பு மற்றும் தேவையான தொழில்நுட்ப மற்றும் செயற்திட்ட ரீதியான சேவை உத்தியோகத்தர்களைத் தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கிராம உத்தியோகத்தர்களைத் தவிர்த்து ஏனைய எந்த உத்தியோகத்தரும் அவ்வாறு நடவடிக்கை எடுத்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

  - பதுளை மற்றும் ஹாலி எல பிரதேச செயலகப் பிரிவுகளில் 195 வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் வீட்டு மட்ட மேற்பார்வை தொடர்பான அறிக்கைகளைப் பேணுவதற்காக வழங்கப்பட்ட புத்தகங்கள் எதுவும் வீடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

  - திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்ட செயலகத்தினால் நலன்பெறுனர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக சிறு ஏற்றுமதிப் பயிர்களைக் கொள்வனவு செய்வதற்காக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்ட ரூபா 536,685 தொகையில் ரூபா 320,156 தொகையான நாற்றுக்கள் 2013 யூலை 10 ஆந் திகதி வரையும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

- 04 பிரதேச செயலகங்களில் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 150 நலன்பெறுனர் குடும்பங்களுக்கு ரூபா 322,000 செலவு செய்து 1380 கோழிக் குஞ்சுகள் மற்றும் 52 குடும்பங்களுக்கு கோழிக் கூடுகளுக்காக உதவி வழங்கப்பட்டிருந்தன. இவற்றில் தெரிவுசெய்யப்பட்ட 92 நலன்பெறுனர் குடும்பங்களை தெரிவு அடிப்படையில் பரீட்சித்த போது வழங்கப்பட்ட 920 கோழிக் குஞ்சுகளில் 180 கோழிக்குஞ்சுகள் இறந்திருந்ததுடன் 199 கோழிக்குஞ்சுகள் விற்கப்பட்டிருந்தன. எஞ்சியிருந்த கோழிக்குஞ்சுகளின் எண்ணிக்கை 571 ஆகும். இறந்த கோழிக் குஞ்சுகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு கால்நடை மருத்துவ அலுவலகத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.
- ஊர்க் கோழிக் குஞ்சுகளுக்குப் பதிலாக பண்ணைக் கோழிக் குஞ்சுகளை வழங்குதல், கோழிக் கூடுகள் உரிய நியமத்தில் தயாரிக்கப்பட்டிருக்காமை, கோழிக் குஞ்சுகளைப் பராமரிக்கும் செலவுகள் கிடைக்கும் நலன்களைவிட அதிகமாக இருத்தல் ஆகிய குறைபாடுகள் காரணமாக செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

- சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு
  இலங்கை மகளிர் பணியகம்

---

- மஹியங்கனை பிரதேச செயலகத்திற்கு 1994 மற்றும் 1995 ஆம் ஆண்டுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 270,000 தொகையான சுழற்சிக் கடன் நிதியத்தின் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறிய 10 சங்கங்களின் 32 அங்கத்தவர்களிடமிருந்து ரூபா 108,245 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. செயற்பாடற்ற 08 சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 200,000 தொகையான கடன் பணம் உரிய நோக்கத்திற்காக ஈபடுத்தப்படாது அச்சங்கங்களின் வங்கி கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தன.
- வெலிமட மற்றும் ஹாலி எல பிரதேச செயலகங்களினால் சுழற்சிக் கடன் நிதியத்திலிருந்து 05 மகளிர் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன் பணத்தில் 12 நலன்பெறுனர்களிடமிருந்து ரூபா 129,175 தொகையான கடன் பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.
- ஹப்புத்தளை பிரதேச செயலகத்தில் பால் கோப்பை நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து 55 சதவீதமான ரூபா 209,483 தொகை எஞ்சியிருந்த போதிலும் 21 முன்பள்ளிகளின் 827

மாணவர்களுக்கு இந்நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணும்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைத் திணைக்களம்

கெபகரு தெகுரு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டிற்காக பதுளை மாவட்ட செயலகத்தினால் 15 பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 327,600 தொகையில் பிரதேச செயலகங்களின் மூலம் உரிய நிகழ்ச்சித் திட்டங்கள் முறைப்படியாக அமுல்படுத்தப்பட்டிருக்காததன் காரணமாக ரூபா 200,100 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

- ஓய்வூதியத் திணைக்களம்

2005 மே 18 ஆந் திகதிய 12/2005 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபம் மற்றும் 2010 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 08/2010 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக ஹாலி எல பிரதேச செயலகத்தினால் 23 ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ரூபா 1,363,294 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## (இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

27601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 42,000,000 | 44,332,711 | 26,000,000 | 47,719,150 | 146,000,000 | 123,760,136 |

27601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்க கூற்றின் பிரகாரம் அத்தகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 7,563,702 கூட்டு மொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

**(ஈ) பொதுவைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொதுவைப்புக் கணக்கின் மீதி ரூபா 442,362,249 ஆகக் காணப்பட்டது. அம்மீதிகளில் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 2,571,414 தொகையான 70 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

நிதிப் பிரமாணம் 756 இன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 35 உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் 03 பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 10 உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக 2012 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணங்கி ஒழுகாமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) தாபன விதிக்கோவை | | |
| (i) XIX ஆம் அத்தியா யத்தின் | 153,656 | லுணுகல மற்றும் மஹியங்கன |

| | | | |
|---|---|---|---|
| | 5 ஆம் பிரிவு | | பிரதேச செயலகங்களின் இரண்டு உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருந்த இரண்டு உத்தியோகத்தர் களிடமிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | | 19,374 | சொரனாதொட பிரதேச செயலகத்தின் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்ட உத்தியோபூர்வ இல்ல வாடகை சம்பள அதிகரிப்புக்களுடன் திருத்தப்படாது மாற்றமின்றி அறவிடப்பட்டது. |
| (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.4 ஆம் பிரிவு | 67,752 | சொரனாதொட பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருந்த இரண்டு உத்தியோகத்தர்களின் மனைவியர்களிடமிருந்து உத்தியோபூர்வ இல்ல வாடகை அறவிடப்படவில்லை. |

(ஆ) நிதிப்பிரமாணங்கள்

--------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நி.பி 371(5) | 315,149 | 06 பிரதேச செயலகங்களினால் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உப கட்டுநிதிகளுக்குரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கணக்காண்டு முடிவில் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தீர்த்துவைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டது. |
| (ii) | நி.பி 751 | 682,689 | பதுளை பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் இருப்பு ஏடுகளில் |

| | | | |
|---|---|---|---|
| | | | உள்ளடக்கப்பட்டு விநியோக கட்டளைகளின் மூலம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது நிர்வாகச் சுற்றுநிருபம் | | |
| | 1990 ஒக்மோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றுசிருபம் | | 06 பிரதேச செயலகங்களினால் 12 வாகனங்களுக்கு 06 மாதங்களுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படவேண்டிய எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஈ) | ஓய்வூதிய சுற்றுநிருபம் | | |
| | 2010 மே 25 ஆந் திகதிய 04/2010 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 08 (11) ஆம் பந்தி | 29,220 | பண்டாரவளை பிரதேச செயலகத்தினால் ஓய்வூதியத்திற்குத் தகைமையற்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட பங்களிப்பு பணம் மாதாந்தம் அந்த நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. |

## 1.8 செயற்திட்டங்களை அமுலாக்கலில் உள்ள நலிவுகள்

உரிய நியமங்களின்றி அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்கள், காலம் தாமதித்து வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் என்பன தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### (அ) உரிய நியமமின்றி அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

ஊவபரணகம பிரதேச செயலகத்தினால் ரூபா 725,166 செலவுசெய்து நிர்மாணிக்கப்பட்ட இதிகஹதோவ சனசமூக மண்டபம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு திட்டம் தயாரிக்கப்படாது நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் மேலிருந்து கீழாக 25 இடங்களில் வெடிப்புக்கள் காணப்பட்டன. கட்டிடத்தின் முற்றப் பகுதியும் 15 இடங்களில் வெடித்திருந்ததுடன் தகரத்தை வளைக்கும் போது 16 மில்லி மீற்றர் அளவுள்ள 05 கம்பிகள் குறைத்து

பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் இரும்பு நிறையின் பிரகாரம் ரூபா 10,985 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) காலம் தாமதித்து வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

காலம் தாமதித்து வேலை ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

(i) ஹப்புத்தளை பிரதேச செயலகத்தினால் ரூபா 2,052,373 மொத்த பெறுமதியான வெலன்ஹின்ன பிரதான வீதி நிர்மாணிப்பு மற்றும் ஹப்புத்தளை புகையிரத நிலைய வீதியை அபிவிருத்தி செய்தல் ஆகிய இரண்டு வேலைகள் 2012 திசெம்பர் 14 ஆந் திகதி வரையும் ஆரம்பிக்கப்படவில்லை.

(ii) 2012 யூன் 20 ஆந் திகதி வேலை முடிவுறுத்தப்பட வேண்டிய ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நிக்கபொத கிழக்கு புதிய கிராம வீதிக்கு கொங்கிறீட் இடும் வேலையின் நிர்மாண நடவடிக்கை 2012 செப்தெம்பர் 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

## 1.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

பதுளை பிரதேச செயலகத்தினால் 2012 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த சீராக்கல்கள் மீதான பகுப்பாய்வின் படி வெளிப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சீராக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாவு | | | |
|---|---|---|---|---|
| | 6 மாதங்களிற்கு மேல் 1 ஆண்டிற்கு குறைந்த | ஆண்டு 1 இற்கு மேல் 3 இற்கு குறைந்த | 03 ஆண்டுகளிற்கு மேல் | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 141,933 | - | - | 141,933 |
| (ஆ) இனங்காணப்படாத வரவு | - | - | 69,299 | 69,299 |

## 1.10 நட்டங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் வெளிப்பட்ட நட்டங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 03 வாகன விபத்துக்கள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ரூபா 136,475 தொகையான நட்டத்தை அறவீடு செய்தல் நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன.

(ஆ) 2008 ஆம் ஆண்டின் போதும் 2009 திசெம்பர் 31 ஆந் திகதியும் இடம்பெற்ற வருடாந்த பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் மஹியங்கனை பிரதேச செயலகத்தின் உத்தயோகபூர்வ இல்லத்தில் ரூபா 49,205 பெறுமதியான 80 பொருட்களின் பற்றாக்குறை தொடர்பான விசாரணை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.11 முகாமைத்துவ பலவினங்கள்

(அ) 06 பிரதேச செயலகங்கள் பணம் பெறுனர்களுக்கு ஒப்படைக்காத ரூபா 3,180,292 பெறுமதியான 141 காசோலைகளை காப்பகத்தில் வைத்திருக்கவில்லை.

(ஆ) மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களின் 34 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகள் நாளதுவரையாக்கப்படவில்லை.

(இ) மாவட்ட செயலகம் மற்றும் 10 பிரதேச செயலகங்கள் நிலையான சொத்துக்களுக்கு இலக்கமிடப்படாமை, பொது 287, 288 மற்றும் 290 பதிவேடுகளை நாளதுவரையாகப் பேணியிருக்காமை என்பவற்றின் காரணமாக சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கமுடியாதிருந்தன.

## 1.12 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிகத்தின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 52 | 46 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 45 | 20 | 25 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1050 | 796 | 256 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 137 | 125 | 24 | 12 |
| (v) | ஏனையோர் (சமயாசமயம்) | - | - | - | - |
| | மொத்தம் | 1,284 | 987 | 311 | 14 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 311 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மிகை ஊழியர் எண்ணிக்கை தொடர்பில் முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.